1. வினாக்கள்–விடைகள்–தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

1—

சட்டக் கல்லூரி

***62034—திருமதி இளமதி சுப்பிரமணியன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வலங்கைமான் நகரில் சட்டக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன்.

முற்பகல் 9–35

திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் தொகுதியில் அரசு சார்ந்த சட்டக் கல்லூரிகள் எதுவும் இல்லை. தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்ட மாணவ, மாணவியர் நலன் கருதி, சட்டக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 5

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை உள்ளடக்கித்தான் அங்கு தற்பொழுது சட்டக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லையென்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன், அவையில் இல்லை.

வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2—

கல்லூரி

***103716—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதியில் 15–க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. இவற்றில்